# விலங்கியல் முக்கிய வினா-விடைகள்

## விலங்குகளின் உணவூட்டம், சுவாசித்தல், வகைப்பாட்டியல்

1. இவற்றில் பொருத்தமான இணை எது?
   A) உடற்குழியற்றது - உருளைப்புழு
   B) குளிர் இரத்த விலங்கு - பறவை
   C) வெப்ப இரத்த விலங்கு - தவளை
   D) உண்மையான உடற்குழியுடையவை - மண்புழு
2. இவற்றில் பொருத்தமான இணை எது?
   A) துளையுடலிகள் - நாடாப்புழு
   B) தட்டைப்புழுக்கள் - அஸ்காரிஸ்
   C) குழியுடலிகள் - ஹைடிரா
   D) உருளைப்புழுக்கள் - மண்புழு
3. இவற்றில் பொருத்தமான இணை எது?
   A) வளைதசைப்புழுக்கள் - மண்புழு
   B) கணுக்காலிகள் - நத்தை
   C) மெல்லுடலிகள் - நட்சத்திரமீன்
   D) முட்தோலிகள் - கரப்பான் பூச்சி
4. இவற்றில் எது உலகிலேயே மிக அதிக நச்சுத்திறன் கொண்ட விலங்கை குறிப்பது?
   A) கடற்குளவி B) ஜெல்லிமீன்
   C) கைரோநக்ஸ் பிளாக்கரி D) இவை அனைத்தும்
5. புரோட்டோசோவாவின் உணவூட்டம் இவ்வகையில் நடைபெறும்
   A) விலங்குமுறை உணவூட்டம்
   B) சாறுண்ணி உணவூட்டம்
   C) ஒட்டுண்ணி உணவூட்டம்
   D) இவை அனைத்தும்
6. துளையுடலிகள் இனப்பெருக்கம் இவ்வகையில் நடைபெறுகிறது
   A) பாலிலா இனப்பெருக்கம்
   B) மொட்டுவிடுதல், கேமேட்டுகள் இணைதல்
   C) பாலினப் பெருக்கம்
   D) இவை அனைத்தும்
7. யானைக்கால் நோயை உண்டாக்கும் பைலேரியல் புழுக்கள் இந்த வகையை சார்ந்ததாகும்
   A) தட்டைப் புழுக்கள் B) உருளைப்புழுக்கள்
   C) வளைதசைப்புழுக்கள் D) அஸ்காரிஸ்
8. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
   A) மண்புழு இடப்பெயர்ச்சி உறுப்பு - பாராபோடியம்
   B) மண்புழு தலைபாகம் - செபாலிசேசன்
   C) மண்புழு உடல்பாகம் - ஹிருடின்
   D) மண்புழு உடற்கண்டங்கள் - மெட்டா மெரிசம்
9. கணுக்காலிகளின் சுவாசமானது இவ்வாறு நடைபெறுகிறது
   A) செவ்வுள்கள் B) டிரக்கியா
   C) புத்தக நுரையீரல் D) இவை அனைத்தும்
10. மெல்லுடலிகளில் இதன்மூலம் சுவாசம் நடைபெறுகிறது
    A) உடற்பரப்பு B) டிராக்கியா
    C) டினீடியம் D) மேன்டில்
11. இவற்றுள் மேன்டில் எனப்படும் மெல்லிய தசைகளை கொண்டது?
    A) கணுக்காலிகள் B) உருளைப்புழுக்கள்
    C) மெல்லுடலிகள் D) வளைதசைப் புழுக்கள்
12. இது குழல் கால்கள் மூலம் இடம் பெயர்கின்றன
    A) முட்தோலிகள் B) மெல்லுடலிகள்
    C) கணுக்காலிகள் D) துளையுடலிகள்
13. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.
    i) முதுகெலும்பற்றவைகளுக்குள் ஒரு செல் பலசெல் உயிரிகளைக் கொண்டது
    ii) முதுகெலும்பற்றவை உடல் உறுப்புகள்- உறுப்பு மண்டலங்கள் எளியவை
    iii) முதுகெலும்பற்றவை தனித்து வாழும்
    மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?
    A) மூன்றும் சரியானவை
    B) i மற்றும் ii சரி
    C) ii மற்றும் iii சரி
    D) i மற்றும் iii சரி
14. உலகிலேயே அதிக நச்சுத் தன்மையுடைய மீன்
    A) விலாங்கு மீன்கள் B) சுறா மீன்கள்
    C) கல் மீன்கள் D) அன்ட்ராமஸ்
15. இவற்றில் பொருத்தமான இணை எது?
    A) மிக மெதுவாக ஊர்வன - கோஸ்டாரிக்க இகுவானி
    B) மிக வேகமான ஊர்வன - கருப்பு மாம்பா
    C) பெரிய ஊர்வன - கொமடோ டிராகன்
    D) சிறிய ஊர்வன - காலப்பகோஸ் ஆமை
16. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
    A) முட்டையிடும் பாலூட்டி - பிளாடிபஸ்
    B) மெதுவாக நகரும் பாலூட்டி - எக்குட்னா
    C) பறக்கும் பாலூட்டி -வௌவால்
    D) நீர்வாழ் பாலூட்டி - நீலத்திமிங்கலங்கள்
17. இவற்றில் சரியான வரிசை எது?
    A) முதிர்உயிரி - லார்வா - கூட்டுப்புழு

B) கூட்டுப்புழு - முதிர் உயிரி - லார்வா

C) லார்வா - கூட்டுப்புழு - முதிர் உயிரி

D) முதிர் உயிரி - கூட்டுப்புழு - லார்வா

18. கொடுக்கப்பட்டுள்ள விலங்கு வகுப்புகளை பரிணாம அடிப்படையில் சரியான வரிசை எது?

A) ஊர்வன - பறவைகள் - மீன்கள்

B) மீன்கள் - ஊர்வன - பறவைகள்

C) பறவைகள் - மீன்கள் - ஊர்வன

D) ஊர்வன - மீன்கள் - பறவைகள்

19. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.

i) பாக்டீரியங்கள் மற்றும் சயனோ பாக்டீரியங்களின் செல்கள் தெளிவான உட்கருவைப் பெற்றிருப்பதில்லை

ii) கூற்று i ஆனது புரோகேரியோட்டிக் செல்கள் என அழைக்கப்படுகின்றன

iii) புரோகியோட்டிக் செல்கள் டி.என்.ஏ. (டி ஆக்ஸிரிபோ நியூக்ளிக் அமிலம்) உட்கரு சவ்வினால் சூழப்பட்டுள்ளது

மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?

A) மூன்றும் சரியானவை

B) i மற்றும் ii சரியானவை

C) ii மற்றும் iii சரியானவை

D) i மற்றும் iii சரியானவை

20. கூற்று (A): புரோகேரியோட்டிக் செல்களைப் பெற்றுள்ள உயிரினங்கள் புரோகேரியோட்டிக் உயிரினங்கள் அல்லது புரோகேரியோட்டுகள் என்று அழைக்கப்படுகின்றன

கூற்று (B): யூகேரியோட்டிக் செல்களைப் பெற்ற உயிரினங்கள் அல்லது யூகேரியோட்டிக் உயிரினங்கள் என்று அழைக்கப்படுகின்றன

A) (A) மற்றும் (B) சரி B) (A) சரி (B) தவறு

C) (A) தவறு (B) சரி D) (A) மற்றும் (B) தவறு

21. இவற்றில் சரியான கூற்று எது?

(i) கடலில் வாழும் பாலூட்டிகள்: டால்பின், திமிங்கலம்

(ii) பறக்கும் பாலூட்டி : வௌவால்கள்

(iii) நிலத்தில் வாழும் பாலூட்டி : மனிதன், நாய்

A) மூன்றும் சரியானவை

B) (i) மட்டும் சரியானது

C) (ii) மட்டும் சரியானது

D) (iii) மட்டும் சரியானது

22. இவற்றல் பொருத்தமற்ற இணை எது?

புறஅடுக்கு ரோமங்கள் - பாலூட்டிகள்

(i) உணர் நார்கள் - திமிங்கலம், டால்பின்

(ii) தொடுவுணர்வு மீசை - பூனை, நாய்

(iii) தற்காப்பு ரோமம் - முள்ளம்பன்றி

A) மூன்றும் சரியானவை B) (i) மட்டும் சரியானது

C) (ii) மட்டும் சரியானது D) (iii) மட்டும் சரியானது

23. கூற்று (A): பாலூட்டிகளின் ரோமமானது உடலின் வெப்பம் வெளியேறாமல் தடுக்கக் கூடிய தோலின் ஒரு புதிய அமைப்பாகும்

கூற்று (B): பாலூட்டிகளின் தோலின் நிறமும், அமைவும் சுற்றுப்புறத்திற்கேற்றவாறு அமைந்துள்ளது.

A) (A) மற்றும் (B) சரி B) (A) சரி (B) தவறு

C) (A) தவறு (B) சரி D) (A) மற்றும் (B) தவறு

24. இவற்றில் தவறான கூற்று எது?

A) அனைத்துப் பாலூட்டிகளுக்கும் ரோமங்கள் உள்ளன

B) பாலூட்டிகள் அனைத்திற்கும் பால் சுரப்பிகள் உள்ளன

C) பால்சுரப்பிகள் மாறுபாடைந்த வியர்வைச் சுரப்பிகளாகும்

D) இவை அனைத்தும் சரி

25. இவற்றில் உயர்ந்த மலைகளில் வாழும் பாலூட்டி எது?

A) கரடிகள் B) மான்கள்

C) யானைகள் D) சிறுத்தைகள்

26. இவற்றில் பொருத்தமான இணை எது?

A) துந்திரப்பகுதி - எருமை

B) பாலைவனம் - முள்ளம்பன்றி

C) நன்னீர் - வால்ரஸ்

D) கடல்நீர் - பிளாட்டிபஸ்

27. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?

A) துந்திரப்பகுதி - காண்டாமிருகம்

B) பாலைவனம் - பிளாக் பக் மான்கள்

C) நன்னீர் - நீர்நாய்

D) கடல்நீர் - டால்பின்

28. இவற்றில் எது கடற்சிங்கம் என அழைக்கப்படுகிறது?

A) திமிங்கலம் B) டால்பின்

C) சீல் D) வால்ரஸ்

29. கீழ்காணும் கூற்றை ஆய்க

(i) பாலூட்டிகளில் நான்கு இரைப்பை சேமிப்பு மற்றும் நொதித்தல் கலனாக உள்ளது

(ii) யானைகளின் வெட்டும் பற்கள் தந்தங்களாக மாறி சிறப்புப் பயன்பாட்டிற்கு உதவுகிறது

(iii) வௌவால் முன்கைகள் இறக்கை போன்ற அமைப்பாக மாறி உள்ளது

மேற்காணும் கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) மூன்றும் சரியானவை

B) (i) மட்டும் சரியானது

C) (ii) மட்டும் சரியானது

D) (iii) மட்டும் சரியானது

30. பாலூட்டிகள்

A) வெப்ப இரத்தப் பிராணிகள்

B) உடல் வெப்பநிலை வாழிட வெப்பத்தின் தாக்கம்

இன்றி ஒரே சீரான வெப்ப நிலையைக் கொண்டுள்ளது

C) உடல் வெப்பநிலை தோலில் உள்ள வியர்வைச் சுரப்பி, சிறுநீரகம், நுரையீரல் மற்றும் இரத்தம் மூலம் நிலைநிறுத்தப்படுகிறது

D) இவை அனைத்தும்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. D | 2. C | 3. A | 4. D | 5. D | 6. D | 7. B | 8. C | 9. D | 10. C | 11. C | 12. A |
| 13. B | 14. C | 15. C | 16. B | 17. C | 18. B | 19. B | 20. A | 21. A | 22. A | 23. A | 24. A |
| 25. A | 26. A | 27. A | 28. C | 29. A | 30. D | | | | | | |

# மனித உடல் உறுப்பு மண்டலங்களின் அமைப்பும் செயல்பாடுகளும்

1. தோல் இந்த பகுதியை உள்ளடக்கியது
   A) புறத்தோல் B) நடுத்தோல்
   C) அகத்தோல் D) இவை அனைத்தும்
2. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
   A) மெலனோ சைட்டு - நிறமி செல்கள்
   B) சீபம் - எண்ணெய் சுரப்பிகள்
   C) அரக்ட்டார் பைலை - புறத்தோல்
   D) அடிப்போஸ் - தோலின் கீழ் அடுக்கு
3. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.
   i) தோல் உடலின் வெப்பநிலையை ஒழுங்குப் படுத்துகிறது
   ii) சூரிய ஒளியின் உதவியினால் புரதத்தை தயாரிக்கிறது
   iii) தோல் உடலின் நீர் இழப்பை தடுக்கிறது
   மேற்கண்ட கூற்றுகளில் தவறானது எது/ எவை?
   A) i மற்றும் ii சரி
   B) ii மற்றும் iii சரி
   C) i மற்றும் iii சரி
   D) அனைத்தும் சரி
4. கூற்று (A): பெண்களின் தோலின் நிறம் அடித்தளச் சவ்வில் காணப்படும் மெலனோசைட் என்ற நிறமி அடுக்குகளால் தீர்மானிக்கப்படுகிறது
   கூற்று (B): மெலனோசைட்டின் உற்பத்தி வைட்டமின் k வால் கட்டுப்படுத்தப்படுகிறது
   A) (A) மற்றும் (B) சரி
   B) (A) தவறு (B) சரி
   C) (A) சரி (B) தவறு
   D) (A) மற்றும் (B) சரி
5. கூற்று (A): மனித உடலில் 400 முதல் 500 தசைகள் காணப்படுகின்றன.
   கூற்று (B): விலங்குகளின் உடலில் தசைகளின் அமைப்பு, செயல் மற்றும் அமைவிடத்தைப் பொறுத்து தசைகள் மூன்று வகைப்படும்.
   A) (A) மற்றும் (B) சரி
   B) (A) தவறு (B) சரி
   C) (A) சரி (B) தவறு
   D) (A) மற்றும் (B) தவறு
6. இவற்றில் தசையின் முக்கிய வகை எது?
   A) எலும்புத் தசைகள்
   B) உள் உறுப்புத் தசைகள்
   C) இதயத் தசைகள்
   D) இவை அனைத்தும்
7. இணைப்பு திசுவால் ஆன இச்சவ்வு எலும்புத்தசையின் மீதுஒரு படலம் போன்று ஒரு போர்வையாக உள்ளது.
   A) தசைப் படலம் B) எலும்புத் தசைகள்
   C) தசை நாண்கள் D) தசைச் சவ்வு
8. கூற்று (A): மனித உடலில் ஐந்து தசைத் தொகுதிகள் காணப்படுகின்றன.
   கூற்று (B): 3. 8 சதுர செ.மீ. பரப்பளவு உள்ள தசை 3.5 கி.கி. எடையைத் தூக்கவல்லது
   A) (A) மற்றும் (B) சரி
   B) (A) சரி (B) தவறு
   C) (A) தவறு (B) சரி
   D) (A) மற்றும் (B) தவறு
9. கீழ்கண்ட கூற்றுகளை ஆய்க.
   i) மூச்சுவிடுதலுக்கான நான்கு முக்கிய தசைகள் உள்ளன.
   ii) உட்சுவாசமானது உள் விலா எலும்பு இடைத் தசைகளும், மார்புத் தசைகளாலும் நிகழும்
   iii) வெளிச்சுவாசமானது ஸ்கேலீன், வெளி விலா எலும்பு இடை தசைகளாலும் நிகழும்.
   மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?
   A) மூன்றும் சரியானவை
   B) i மட்டும் சரியானது
   C) ii மட்டும் சரியானது
   D) iii மட்டும் சரியானது
10. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.
    i) உதரவிதானம் இரைப்பையை கட்டுப்படுத்துகிறது.
    ii) உதரவிதானம் தசைநார் சவ்வினால் ஆனது
    iii) உதரவிதானம் மார்பறையையும் வயிற்றையும் பிரிக்கிறது மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?
    A) மூன்றும் சரியானவை
    B) i மற்றும் ii சரியானவை
    C) ii மற்றும் iii சரியானது

D) i மற்றும் iii சரியானது

11. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) லாட்டிஸ்மஸ் டார்ச்சை - முதுகுத்தசை
B) டிரப்பீசியஸ் - மார்பு தசை
C) டெல்டாயிடுகள் - தோள்தசை
D) பெக்டோரல்கள் - மார்புத்தசை

12. இவற்றில் பொருத்தமான இணை எது?
A) காஃப் தசை - முத்தலைத் தசை
B) ட்ரைசெப்ஸ் - பின்கால்தசை
C) பைசெப்ஸ் - இருதலைத் தசை
D) டிரப்பீசியஸ் - முதுகு, கழுத்து தசை

13. கூற்று (A): மனித எலும்பு மண்டலம் அச்சுச் சட்டகம் இணையுறுப்புச் சட்டகம் என இருபெரும் பிரிவாகப் பிரிக்கப்படுகிறது.
கூற்று (B): இணையுறுப்புச் சட்டகம் உடலை நேராக வைத்திருக்க உதவுகிறது
A) (A) மற்றும் (B) சரி
B) (A) சரி (B) தவறு
C) (A) தவறு (B) சரி
D) (A) மற்றும் (B) தவறு

14. அச்சுச் சட்டகத்தில் இது அடங்கியுள்ளது
A) மண்டையோடு B) முதுகெலும்புத்தொடர்
C) மார்புக்கூடு D) இவை அனைத்தும்

15. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) தலை எலும்பு - 8 எலும்புகள்
B) முதுகெலும்பு - 24 எலும்புகள்
C) மண்டையோடு - 22 எலும்புகள்
D) மார்புக்கூடு - 12 எலும்புகள்

16. இவற்றில் எந்தவகை எலும்பு மார்புக்கூட்டில் உள்ளது?
A) முன்பகுதி மார்பெலும்பு
B) பின்பகுதி முதுகெலும்புத் தொடர்
C) விலா எலும்பு
D) இவை அனைத்தும்

17. மார்பெலும்புடன் நேரடியாக இணைந்துள்ள முதல் 7 இணை விலா எலும்புகள் இவ்வாறு அழைக்கப் படுகிறது
A) உண்மை விலா எலும்புகள்
B) பொய் விலா எலும்புகள்
C) மிதக்கும் விலா எலும்புகள்
D) இவை அனைத்தும்

18. மனிதனின் முதுகெலும்புத் தொடரில் எத்தனை முதுகு முள்ளெலும்புகள் உள்ளன?
A) 22 B) 33 C) 44 D) 55

19. இவற்றில் பொருத்தமான இணையை தேர்வு செய்க.
A) கழுத்து முள்ளெலும்பு - 4
B) மார்பு முள்ளெலும்பு - 58
C) இடுப்பு முள்ளெலும்பு - 5
D) வால் முள்ளெலும்பு - 7

20. இணையுறுப்பு எலும்பு மண்டலத்தில் இது அடங்குவதில்லை
A) தோள்பட்டை B) கையெலும்பு
C) வால் எலும்புகள் D) இடுப்பு வளையம்

21. கையெலும்பு பொருந்தும் குழி
A) கிளினாய்டு B) அசிட்டாபுலம்
C) ட்ரைசெப்ஸ் D) பைசெப்ஸ்

22. இவற்றில் பொருத்தமான இணை எது?
A) சாக்ரம் - திருவெலும்பு
B) இலியம் - பூப்பெலும்பு
C) இஸ்கியம் - கவடு எலும்பு
D) பியுபிஸ் - இடுப்புபிணைப்பெலும்பு

23. இவற்றில் பீமர் எனப்படுவது
A) முன்காலெலும்பு
B) கணுக்கால் எலும்பு
C) தொடை எலும்பு
D) முழங்கால் எலும்பு

24. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.
i) எலும்புகள் உள் உறுப்புகளுக்குப் பாதுகாப்பைத் தருகிறது
ii) எலும்புகள் கொழுப்பு மற்றும் கால்சியத்தைச் சேமிக்கும் இடமாக விளங்குகிறது
iii) எலும்பு மஞ்ஞை இரத்த சிவப்பணுக்களை உற்பத்தி செய்யும் இடமாக விளங்குகிறது
மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?
A) மூன்றும் சரியானவை
B) i மட்டும் சரியானது
C) ii மட்டும் சரியானது
D) iii மட்டும் சரியானது

25. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) மனித மொத்த எலும்புகள் - 206
B) அச்சுச் சட்டகம் - 25
C) இணையுறுப்புச் சட்டகம் - 126
D) முதுகெலும்புத் தொடர் - 26

26. கூற்று (A): செரித்தல் என்பது பெரிய, சிக்கலான உணவு மூலக்கூறுகளை இரத்தத்தால் உறிஞ்சப்படக் கூடிய எளிய மூலக்கூறுகளாக மாற்றும் வேதி நிகழ்வு
கூற்று (B): செரித்தல் என்பது பெரிய, சிக்கலான உணவு மூலக்கூறுகளை நிண நீரால் உறிஞ்சப்படக் கூடிய எளிய மூலக் கூறுகளாக மாற்றும் வேதி நிகழ்வு
A) (A) மற்றும் (B) சரி
B) (A) சரி (B) தவறு
C) (A) தவறு (B) சரி
D) (A) மற்றும் (B) தவறு

27. இவற்றில் தவறான இணை எது?
A) கார்போஹைடிரேட் - குளுக்கோஸ்
B) புரதம் - அமினோ அமிலங்கள்
C) கொழுப்பு - கொழுப்பு அமிலம்
D) வைட்டமின் - கிளிசரால்

28. இவற்றில் சரியான வரிசை எது?
A) இரப்பை - உணவுக்குழல் - மலக்குடல்
B) மலக்குடல் - இரைப்பை - உணவுக்குழல்
C) உணவுக்குழல் - இரைப்பை - மலக்குடல்
D) மலக்குடல் - உணவுக்குழல் - இரைப்பை

29. இவற்றில் செரித்தல் தொடர்புடைய சுரப்பி எது?
A) உமிழ்நீர் சுரப்பி B) கணையம்

C) கல்லீரல் சுரப்பி D) இவை அனைத்தும்

30. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) மனித பற்கள் - 32
B) வெட்டுப்பற்கள் - 6
C) கோரைப் பற்கள் - 2
D) முன் கடவாய் பற்கள் - 4

31. 20 வயதிற்கு பின்னர் முளைக்கும் பற்கள்
A) கோரைப் பற்கள் B) வெட்டு பற்கள்
C) ஞானப் பற்கள் D) முன் கடவாய் பற்கள்

32. வாயில் காணப்படும் இணை உமிழ் நீர் சுரப்பிகள்
A) மேலண்ண சுரப்பிகள்
B) கீழ்த்தாடைச் சுரப்பிகள்
C) நாவடிச் சுரப்பிகள்
D) இவை அனைத்தும்

33. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.
i) மேலண்ண சுரப்பிகள் நாக்கின் அடிப்புறத்தில் அமைந்துள்ளன
ii) கீழ்த்தாடை சுரப்பிகள், ஒழுங்கற்ற வடிவம் கொண்ட இச்சுரப்பிகள் தாடைகள் இணையும் இடத்தில் கீழ்ப்புறமாக அமைந்துள்ளன
iii) நாவடிச் சுரப்பிகள், காதுக்கு அருகில் அமைந்துள்ளன
மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?
A) மூன்றும் சரியானவை
B) i மட்டும் சரியானது
C) ii மட்டும் சரியானது
D) iii மட்டும் சரியானது

34. பொன்னுக்கு வீங்கி என்ற வைரஸ் நோயினால் பாதிக்கப்படுவது
A) மேலண்ண சுரப்பிகள்
B) கீழ்த்தாடைச் சுரப்பிகள்
C) நாவடிச் சுரப்பிகள்
D) இவை அனைத்தும்

35. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) டையலின் - அமிலேஸ்
B) பைகார்பனேட் - உப்பு
C) கோழை - சர்க்கரை
D) லைசோசைம் - நொதி

36. இவற்றில் பொருத்தமான இணை எது?
A) யூஸ்டேசியன் - இரைப்பை
B) எப்பீதீலியம் - திசு
C) கார்டியாக் - குழல்கள்
D) பைலோரஸ் - கோழைப்படலம்

37. இவற்றில் எப்பீதீலியம் திசு எதில் காணப்படுகிறது?
A) தொண்டை B) உணவுக்குழல்
C) இரைப்பை D) நாக்கு

38. இவற்றில் இரைப்பையின் முக்கிய பகுதி எது?
A) கார்டியாக் இரைப்பை
B) ஃப்ண்ட்ஸ இரைப்பை
C) பைலோரஸ் இரைப்பை
D) இவை அனைத்தும்

39. இவற்றில் இரைப்பையில் காணப்படும் நொதி எது?
A) பெப்சின்
B) ரெனின்
C) ஹைட்ரோகுளோரிக் அமிலம்
D) இவை அனைத்தும்

40. இந்த செல்லினால் ஹைட்ரோகுளோரிக் அமிலம் உற்பத்தி செய்யப்படுகிறது
A) பெப்சின் B) ரெனின்
C) ஆக்ஸன்டிக் D) இவை அனைத்தும்

41. இவற்றில் சிறுகுடலின் முக்கிய பகுதி எது?
A) டியோடினம் B) ஜீஜீனம்
C) இலியம் D) இவை அனைத்தும்

42. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.
i) மனித உடலில் மிகப்பெரிய சுரப்பி கல்லீரலாகும்
ii) கல்லீரலின் எடை 500 கிராம்
iii) கல்லீரல் பித்தநீரை சுரக்கின்றன
மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?
A) மூன்றும் சரியானவை
B) i மற்றும் ii சரியானது
C) ii மற்றும் iii சரியானது
D) i மற்றும் iii சரியானது

43. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.
i) பித்தநீர் சிவப்பு கலந்த பச்சை நிறத் திரவம்
ii) பித்தநீர் புரதம் செரித்தலுக்கு உதவுகின்றது
iii) பித்தநீரில் பித்த உப்புகளையும், பித்த நிறமிகளையும் தவிர செரித்தலுக்கு உதவும் நொதிகள் கிடையாது மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?
A) மூன்றும் சரியானவை B) i மட்டும் சரியானது
C) ii மட்டும் சரியானது D) iii மட்டும் சரியானது

44. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.
i) அதிகப்படியான கொழுப்பு கலந்த உணவை உண்பதனால் பித்த பையில் பித்த கற்கள் உண்டாகும்
ii) பித்த உப்புகள்: பில்லி ரூபின், பில்லி விரிடின்
iii) பித்த நிறமிகள்: சோடியம் கிளைக் கோலட், சோடியம் டாரு கிளைக்கோலேட்.
மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?
A) மூன்றும் சரியானவை
B) i மட்டும் சரியானது
C) ii மட்டும் சரியானது
D) iii மட்டும் சரியானது

45. சிறுகுடல் நீரில் காணப்படாத நொதி எது?
A) சுக்ரோஸ் B) மால்டேஸ்
C) இன்சுலின் D) லைப்பேஸ்

46. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) கணையம் - இன்சுலின்
B) குளுக்கோகான் - ஹார்மோன்
C) பிட்டா செல்கள் - குடல் உறிஞ்சிகள்
D) டிரிப்ஸின் - இறங்குகுடல்

47. இவற்றில் நாளமில்லா சுரப்பியாகக் கணையம் சுரக்கக்கூடிய நொதியாக இல்லாதது
A) லாக்டேஸ் B) அமைலேஸ்
C) டிரிப்ஸின் D) லைபேஸ்

48. இவற்றில் சரியான வரிசை எது?
A) ஜீஜீனம் - டியோடினம் - இலியம்

B) டியோடினம் - ஜீஜீனம் - இலியம்
C) இலியம் - ஜீஜீனம் - டியோடினம்
D) டியோடினம் - இலியம் - ஜீஜீனம்

49. இவற்றில் எது பெருங்குடலின் பகுதி?
A) சீக்கிம் B) கோலன்
C) ரெக்டம் D) இவை அனைத்தும்

50. இவற்றில் எதன் பகுதியில் குடல்வால் காணப்படுகிறது?
A) கணையம் B) ஜீஜீனம்
C) இலியம் D) சீக்கிம்

51. இவற்றில் எது உணவுப் பாதையின் பணி?
A) உணவைச் செரித்தல்
B) உணவு உட்கிரகித்தல்
C) உணவு தன்மயமாதல்
D) இவை அனைத்தும்

52. இவற்றில் எது நைட்ரஜன் அடங்கிய கழிவுப் பொருட்களை அமோனியாவாக வெளித்தள்ளுகின்றது
A) கடல்மீன்கள் B) டிலியாஸ்ட் மீன்கள்
C) பறவைகள் D) நன்னீர் ஆமைகள்

53. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) அமீபா - சுருங்கும் நுண்குழல்கள்
B) மண்புழு - நெஃப்ரிடியாக்கள்
C) பூச்சிகள்- சிறுநீரகங்கள்
D) நாடாப்புழு - சுடர் செல்கள்

54. மனித கழிவுத் தொகுப்பில் உள்ளது
A) ஓரிணை சிறுநீரகம் B) ஓரிணை சிறுநீரகக் குழல்
C) ஒரு சிறுநீர்பை D) இவை அனைத்தும்

55. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) சிறுநீரகம் - அவரை விதை வடிவ உறுப்பு
B) சிறுநீரக சவ்வு - கேப்சியூல்
C) சிறுநீரக செயல் அலகு - நெஃப்ரான்கள்
D) சிறுநீரக நீளம் - 6. செ.மீ.

56. வியர்வையில் கலந்துள்ளது
A) யூரியா B) யூரிக் அமிலம்
C) லாக்டிக் அமிலம் D) இவை அனைத்தும்

57. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.
i) சிறுநீரகம் உடலில் நீர் மற்றும் எலக்ரோலைட்டுகளைச் சமநிலைப்படுத்த உதவுகிறது
ii) சிறுநீரகம் அமில - காரச் சமநிலையை ஒழுங்குபடுத்துகிறது
iii) சிறுநீரகம் இரத்தத்திலும், திசுக்களிலும் உண்டாகும் ஊடு கலப்பு அழுத்தத்தை சமநிலைப்படுத்த உதவுகிறது
மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?
A) மூன்றும் சரியானவை
B) i மட்டும் சரியானது
C) ii மட்டும் சரியானது
D) iii மட்டும் சரியானது

58. சுற்றோட்டத் தொகுப்பு என்பது இது அடங்கிய ஒரு சிறப்பு வகை தொகுப்பாகும்
A) இதயம் B) இரத்தக்குழாய்கள்
C) இரத்தம் D) இவை அனைத்தும்

59. இவற்றில் 13 அறைகளைக் கொண்ட இதயத்தை கொண்ட உயிரினம் எது?
A) மண்புழு B) கரப்பான் பூச்சி
C) மீன்கள் D) ஊர்வன

60. 'இதயம்' இந்த பகுதியில் வைக்கப்பட்டுள்ளது
A) பெரிகார்டியம் B) பெரிகார்டிய திரவம்
C) மீடியாஸ்டினம் D) ஏட்ரியம்

61. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) இதயம் உறை - பெரிகார்டியம்
B) இதயம் வடிவம் - கூம்பு வடிவம்
C) இதய தடித்த சுவர் - ஏட்ரியம்
D) இதய இடைசுவர் - எட்ரியோ வெண்டிரிகுலார்

62. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) இடது ஏட்ரியம் - கொரோனரிசிரை
B) உயிர்வளி அற்ற இரத்தம் - நுரையீரல் தமனி
C) உயிர்வளி உள்ள இரத்தம் - இடது ஏட்ரியம்
D) மகாதமனி - இடது வெண்டிரிக்கிள்

63. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.
i) மூவிதழ்வால்வு : இடது ஏட்ரியத்திற்கும், இடது வெண்டிரிக்கிளுக்கும் இடையில் காணப்படும்
ii) ஈரிதழ் வால்வு: வலது ஏட்ரியத்திற்கும், வலது வெண்டிரிக்கிளுக்கும் இடையில் காணப்படுகிறது
iii) அரைச்சந்திர வால்வு நுரையீரல் தமனி புறப்படும் இடத்திலும், மகாதமனி புறப்படும் இடத்திலும் காணப்படுகிறது மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) மூன்றும் சரியானவை B) i மட்டும் சரியானது
C) ii மட்டும் சரியானது D) iii மட்டும் சரியானது

64. கூற்று (A): நுரையீரல் தமனி உயிர்வளி நிறைந்த இரத்தத்தை எடுத்துச் செல்கிறது
கூற்று (B): நுரையீரல் சிரை உயிர்வளி அற்ற இரத்தத்தை எடுத்துச் செல்கிறது
A) (A) மற்றும் (B) சரி
B) (A) சரி (B) தவறு
C) (A) தவறு (B) சரி
D) (A) மற்றும் (B) தவறு

65. கூற்று (A): பிளாஸ்மா என்பது இரத்த செல்லுக்கு வெளியே காணப்படும் திரவமாகும்
கூற்று (B): இரத்தத்தில் 55% இரத்தச் செல்கள் காணப்படுகின்றன
A) (A) மற்றும் (B) சரி
B) (A) சரி (B) தவறு
C) (A) மற்றும் (B) தவறு
D) (A) தவறு (B) சரி

66. இவற்றில் பிளாஸ்மாவில் காணப்படுவது
A) புரதங்கள், நொதிகள் B) ஹார்மோன்கள்
C) கழிவுகள், தனிமங்கள் D) இவை அனைத்தும்

67. பிளாஸ்மா என்பது
A) வெளிர்பச்சை நிறத்திரவம்
B) வெளிர் மஞ்சள் நிறத்திரவம்
C) வெளிர் சிகப்பு நிறத்திரவம்
D) வெளிர் நீல நிறத்திரவம்

68. இவற்றில் இரத்தத்தில் காணப்படும் முக்கிய செல்
A) சிவப்பணுக்கள் B) வெள்ளையணுக்கள்
C) இரத்தத் தட்டுகள் D) இவை அனைத்தும்

69. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?

A) பிளாஸ்மா - இரத்த உட்கூறு

B) எரித்ரோசைட்டுகள் - சிவப்பணுக்கள்

C) லுயுக்கோசைட்டுகள் - வெள்ளையணுக்கள்

D) திராம்போசைட்டுகள் - இரத்தத் தட்டுகள்

70. இவற்றில் தவறான கூற்று எது?

A) சிரைகள் சுவர் மெல்லியதாகவும், மீள் சக்தியற்றதாகவும் காணப்படுகிறது

B) சிரைகள் இதயத்திலிருந்து இரத்தத்தை உடல் உறுப்புகளுக்கு கொண்டு செல்கிறது

C) சிரைகள் உடலின் மேல்பகுதியில் காணப்படுகிறது

D) சிரைகள் வால்வுகள் காணப்படுகின்றன

71. இரத்த சிவப்பணு பற்றிய தவறான கூற்று எது?

A) உட்கரு உள்ள செல்கள்

B) ஹீமோகுளோபின் என்ற சுவாச நிறமியை பெற்று இருப்பதினால் சிவப்பு நிறமுடையதாக காட்சியளிக்கிறது

C) இதன் வாழ்நாட்கள் 120 நாட்கள்

D) ஒரு கன மில்லி மீட்டர் இரத்தத்தில் 5 மில்லியன் இரத்த சிவப்பணுக்கள் காணப்படுகின்றது

72. வெள்ளையணுக்கள் பற்றிய தவறான கூற்று எது?

A) வெள்ளையணுக்கள் இருபுறமும் குழியான தட்டுகளாகும்

B) ஒரு கன மில்லி மீட்டர் இரத்தத்தில் சுமார் 8000 வெள்ளையணுக்கள் காணப்படுகின்றன

C) வாழ்காலம் 4 வாரங்கள்

D) வெள்ளையணுக்கள் நோய் கிருமிகளிடம் போராடி உடலை நோயிலிருந்து பாதுகாக்கின்றன

73. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.

i) எரித்ரோசைட்டுகள் எலும்புகளின் மஞ்சள் மஜ்ஜையிலும், நிணநீர் முடிச்சுகளிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன

ii) லுயுக்கோசைட்டுகள் எலும்புகளின் சிவப்பு மஜ்ஜையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை கல்லீரலிலும் மண்ணீரலிலும் அழிக்கப்படுகின்றன

iii) திராம்போசைட்டுகள் இரத்தத்தில் மிதந்து காணப்படும்

மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?

A) மூன்றும் சரியானவை

B) i மட்டும் சரியானது

C) ii மட்டும் சரியானது

D) iii மட்டும் சரியானது

74. இவற்றில் எது வெள்ளையணுக்களின் முக்கிய வகை

A) மோனோசைட்டுகள்

B) லிம்ஃபோசைட்டுகள்

C) நியூட்ரோஃபில்கள்

D) இவை அனைத்தும்

75. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.

i) இரத்தம் செரித்த உணவைஉடலின் எல்லா பகுதிகளுக்கும் கொண்டு செல்கிறது

ii) உடலின் வெப்பநிலையை சீராக வைத்துக் கொள்கிறது

iii) உடல் திசுக்களை ஈரமாக வைத்துக்கொள்கிறது

மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?

A) மூன்றும் சரியானவை

B) i மட்டும் சரியானது

C) ii மட்டும் சரியானது

D) iii மட்டும் சரியானது

76. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.

i) மூச்சுவிடுதல் என்பது சுவாசித்தலிலிருந்து வேறுபட்ட நிகழ்வு

ii) வளிச்சுவாசம் அதிக அளவு சக்தியைக் கொடுக்கக்கூடிய இந்த சுவாசம் முழுமையான உயிர்வளி நிறைந்த சூழ்நிலையில் நிகழ்கிறது

iii) வளியற்ற சுவாசம் உயிர்வளி அற்ற சூழ்நிலையில் நிகழ்கிறது மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?

A) மூன்றும் சரியானவை

B) i மட்டும் சரியானது

C) ii மட்டும் சரியானது

D) iii மட்டும் சரியானது

77. கூற்று (A): மனிதன் நுரையீரல் கூம்பு வடிவமானவை.

கூற்று (B): வலது நுரையீரல் இரண்டு மடிப்பினையும், இடது நுரையீரல் மூன்று மடிப்பினையும் கொண்டுள்ளது

A) (A) மற்றும் (B) சரி

B) (A) சரி (B) தவறு

C) (A) தவறு (B) சரி

D) (A) மற்றும் (B) தவறு

78. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?

A) தொண்டை குறுத்தெலும்பு - கரினா

B) நுரையீரல் உறை - புளுரா

C) மூச்சுக்குழல் - புளுரல் அறை

D) நுரையீரல் வடிவம் - கூம்பு

79. கூற்று (A): பால் இனப்பெருக்கம் இரண்டு உயிரிகள் பங்குபெறுகின்றன. (ஆண், பெண்) இரண்டுமே கேமிட்டுகளை உற்பத்தி செய்கின்றன

கூற்று (B): பால் இனப்பெருக்கம் ஆண், பெண் கேமிட்டுகள் (விந்து, அண்டகம்) இணைந்து கருமுட்டை உருவாகிறது.

A) (A) மற்றும் (B) சரி

B) (A) மற்றும் (B) தவறு

C) (A) சரி (B) தவறு

D) (A) தவறு (B) சரி

80. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?

A) உணர்நீட்சி - ஹைடிரா

B) ஒரு பால் உயிரி - மனிதன்

C) இருபால் உயிரி - நாடாப்புழு

D) இணைவுமுறை - பாரமேசியம்

81. இவற்றில் பாலிலா இனப்பெருக்கத்தின் நன்மை

A) ஒரே ஒரு உயிரி போதுமானது

B) இனசெல்களோ, கருவுறுதலோ தேவையில்லை

C) இளம் உயிரிகள் பெற்றோரை ஒத்து காணப்படுகின்றன

D) இவை அனைத்தும்

82. இவற்றில் சரியான வரிசை எது?
A) கரு - இளம் உயிரி - கருமுட்டை
B) கருமுட்டை - கரு - இளம்உயிரி
C) இளம் உயிரி - கருமுட்டை - கரு
D) கரு - கருமுட்டை - இளம்உயிரி

83. ஆண் இனப்பெருக்க மண்டலத்தில் முதல் நிலை பால் உறுப்பு
A) விந்தகம் B) செமினல் பை
C) புரோஸ்டேட் சுரப்பி D) ஆண்குறி

84. ஆணின் இரண்டாம் நிலை பால் பண்பு எது?
A) தாடி மீசை வளர்தல்
B) உடம்பில் முடிவளர்தல்
C) கனத்த குரல்
D) இவை அனைத்தும்

85. ஆன்ட்ரோஜன் என்பது
A) விந்தகத்தின் தாழி செல்கள்
B) விந்து நாளப் பாதை
C) ஆண் இனப்பெருக்க ஹார்மோன்
D) விந்து கோழை திரவம்

86. விந்து இந்த பாகத்தை கொண்டது
A) தலை B) கழுத்து
C) வால் D) இவை அனைத்தும்

87. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) விந்து தலை - ஹையாலூரினிடேசு
B) விந்து கழுத்து - புரோட்டியோலிக்டிக்
C) விந்து நடுப்பகுதி - மைட்டோகாண்ட்ரியா
D) விந்து வால்பகுதி - சைட்டோபிளாசம்

88. இவற்றில் பெண் துணை இனப்பெருக்க உறுப்பானது
A) கருப்பை நாளங்கள்
B) செர்விக்ஸ்
C) கலவிக் கால்வாய்
D) இவை அனைத்தும்

89. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.
i) அண்டம் 28 நாளுக்கொருமுறை/ மாதவிடாய் சுழற்சி அண்டத்தை உருவாக்குகிறது
ii) அண்டம் பெண் இனப்பெருக்க ஹார்மோனாகிய ஈஸ்ட்ரோஜனையும் ஆன்ட்ரோஜனை சுரக்கிறது
iii) ஒவ்வோர் அண்டத்திலுள்ள செர்டோலி செல்கள் அண்டத்தை உருவாக்கும் முறைக்கு அண்ட உருவாக்கம் என்று பெயர்
மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/ எவை?
A) மூன்றும் சரியானவை
B) i மட்டும் சரியானது
C) ii மட்டும் சரியானது
D) iii மட்டும் சரியானது

90. ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் இந்த இரண்டாம் நிலைப் பால் பண்புகளுக்கு காரணமாகிறது
A) மார்பக வளர்ச்சி
B) முடி வளர்தல்
C) பெண்ணினத்திற்குரிய குரல்
D) இவை அனைத்தும்

91. மனித அண்டம்
A) எலெசித்தல் வகையைச் சார்ந்தது
B) கார்டிக்கல் துகள்களை கொண்டது
C) கருத்தட்டுகளை கொண்டது
D) இவை அனைத்தும்

92. அண்டத்தை ஒட்டி காணப்படும் மெல்லிய ஒளிபுகும் தன்மையுடைய சவ்வு
A) வைட்டலின் சவ்வு
B) சோனா பெலுசிடா
C) கொரோனா ரேடியேட்டா
D) லூட்டினைசிங்

93. பெண் மாதவிடாயின் சரியான வரிசை எது?
A) மாதவிடாய் நிலை - லூட்டியல் நிலை - ஃபாலி குளார் நிலை
B) லூட்டியல் நிலை - மாதவிடாய் நிலை - ஃபாலிகுளார் நிலை
C) ஃபாலிகுளார் நிலை - லூட்டியல் நிலை - மாதவிடாய் நிலை
D) மாதவிடாய் நிலை - ஃபாலிகுளார் நிலை - லூட்டியல் நிலை

94. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) பெருக்க நிலை - ஃபாலிகுளார் நிலை
B) முன் மாதவிடாய் - லூட்டியல் நிலை
C) கர்ப்பகாலஹார்மோன் - என்டோமெட்டீரியம்
D) நாளமில்லா சுரப்பி - கார்ப்பஸ் லூட்டியம்

95. கரு வளர்ச்சியின் முதல் நிலை
A) கருவுறுதல்
B) பிளவிப் பெருக்கல்
C) பிளாஸ்டுலா
D) கரு பதித்தல்

96. இவற்றில் கருவை சுற்றி உருவாகும் வெளிக்கரு சவ்வு
A) ஆம்னியான் B) அலன்டாய்ஸ்
C) கோரியான் D) இவை அனைத்தும்

97. தாயையும், சேயையும் இணைக்கப் பயன்படும் தாய்சேய் இணைப்புத்திசு இதனால் உருவாகிறது
A) அலன்டாய்ஸ் B) சோனாபெலுசிடார்
C) ஆம்புல்லா D) கருவூண்பை

98. ஆம்னியான் என்பது
A) கருப்பை B) கலவிக் கால்வாய்
C) பனிக்குடம் D) தொப்புள் கொடி

99. குழந்தை பிறப்பின் துவக்கமாக இந்த ஹார்மோனின் செயலால் கருப்பை சீராக துவங்குகிறது
A) புரோஜெஸ்டிரோன்
B) ஈஸ்ட்ரோஜன்
C) லூட்டினைசிங்
D) ஆக்ஸிடோசின்

100. கூற்று (A): குழந்தை பிறப்பிற்கு பின் முதன் முறை யாக தாயின் பால் சுரப்பியிலிருந்து சுரக்கும் பால் சீம்பால் எனப்படும். இது புரதம், பல்வேறு ஊட்டச் சத்துகள், நோய் எதிர்ப்புத் திறன் கொண்டுள்ளது
காரணம் (R) : பிட்யூட்டரி ஹார்மோனை புரோலாக்டின் பால் சுரத்தலைத் தூண்டுகிறது
A) (A) மற்றும் (R) சரி. மேலும் (R) ஆனது (A) வுக்கான சரியான காரணமாகும்

B) (A) மற்றும் (R) சரி. ஆனால் (R) ஆனது (A)வுக்கான சரியான காரணமல்ல

C) (A) சரி (R) தவறு

D) (A) தவறு (R) சரி

101. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க.

i) தாய்ப்பாலின் கலோரி மதிப்பு 70/100 மி.லி.

ii) தாய்ப்பால் குழந்தையை வைரஸ், பாக்டீரியா தொற்றுகளிலிருந்து ஆரம்ப காலத்தில் பாதுகாக்கிறது

iii) தாய்ப்பால் ஒருத்தலைவலிக்கு மருந்தாக பயன்படுகிறது

மேற்கண்ட கூற்றுகளில் தவறானது எது/ எவை?

A) மூன்றும் சரியானவை

B) i மற்றும் ii சரியானவை

C) ii மற்றும் iii சரியானவை

D) i மற்றும் iii சரியானவை

102. தாய்ப்பாலில் இருக்கும் .................... என்ற புரதம் குடல் மற்றும் சுவாச தொற்றி லிருந்து குழந்தையை பாதுகாக்கிறது

A) லேக்டோபெரின் B) குளுக்கோஸ்

C) கிளிசரால் D) அமினோ அமிலங்கள்

103. கூற்று (A): கருவுறுதலையும் கருவின் முதல் கால வளர்ச்சியையும் ஒரு செயற்கையான ஊடகத்தில் நிகழ்த்தி அதன்பின் அதை ஒரு தாயின் கருப்பையில் புகுத்தி முழுமையான குழந்தை பெறும் நிகழ்வு சோதனைக்குழாய் குழந்தை என்று பெயர்

கூற்று (B): சோதனைக்குழாய் குழந்தை பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த ஸ்டெஃப்டொ மற்றும் எட்வர்ட் ஆகியோர் முதன் முறையாக வெற்றிகரமாக உருவாக்கினார்கள்

A) (A) மற்றும் (B) சரி

B) (A) சரி (B) தவறு

C) (A) தவறு (B) சரி

D) (A) மற்றும் (B) தவறு

104. கூற்று (i): வேறுபட்ட தூண்டல்களைக் கண்டறிதல், பெறுதல், கடத்துதல் போன்ற செயல்களைச் செய்யும் சிறப்பு வகை செல்களே நியூரான்கள் ஆகும்

கூற்று (ii): நியூரான்கள் என்பது நரம்பு செல்களின் நீட்சியான கற்றைகளைக் கொண்ட இழை அமைப்பாகும்

A) (i) மட்டும் சரியானவை

B) (i) சரி (ii) தவறு

C) (i) தவறு (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

105. நியூரான்கள் என்பது

A) நரம்பு இழை

B) நரம்பு நீட்சி கற்றை

C) நரம்பு செயல் அலகு

D) நரம்பு தூண்டல்

106. இவற்றில் எது நரம்பு பகுதியில்லை

A) செல் உடலம்

B) டென்டிரைட்டுகள்

C) அடினோ ஹைப்போ

D) ஆக்ஸான்

107. இவற்றில் பொருத்தமான இணை எது

A) செல் உடலம் - டென்டிரைட்டுகள்

B) குட்டை இழைகள் - சைட்டான்

C) ஆக்ஸான மையல் உறை - ரன்வீரின் கணுக்கள்

D) நரம்பு செல் இடைவெளி - நியூரான்

108. நரம்பில் ........... செல் உடலை நோக்கி மின்தூண்டல்களை கடத்துகின்றன

A) டென்டிரைட்டுகள்

B) ஸ்சுவான்

C) சைட்டான்

D) ஆக்ஸான்

109. மையலின் உறை அற்ற நியூரான்கள் என்பது

A) மெடுல்லோட்டட் அற்ற நியூரான்கள்

B) சாம்பல் நியூரான்கள்

C) மெடுல்லோட்டட் அல்லது வெண்மை நியூரான்கள்

D) A மற்றும் B சரி

110. பெருமூளை புறணியில் உள்ளவை

A) ஒருமுனை நியூரான்கள்

B) இருமுனை நியூரான்கள்

C) மும்முனை நியூரான்கள்

D) பலமுனை நியூரான்கள்

111. கூற்று (A): அருகருகே அமைந்த நியூரான்களின் டென்டிரைட்டுகளும், நரம்பு செல் இடைவெளி குமிழ்களும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து கொள்ளாமல் ஆனால் அதே சமயம் உடல் தொடர்புக் கொண்டுள்ளன.

கூற்று (R): அருகருகே அமைந்த நரம்பு செல்களுக்கு இடையேயான தொடர் பகுதி நரம்பு செல் இணைப்பு என அழைக்கப்படும்.

A) (A) மற்றும் (R) சரி. மேலும் (R) ஆனது (A)வுக்கான சரியான விளக்கமாகும்

B) (A) மற்றும் (R) சரி. ஆனால் (R) ஆனது (A)வுக்கான சரியான விளக்கமல்ல

C) (A) சரி (R) தவறு

D) (A) தவறு (R) சரி

112. கூற்று (i): நரம்பு செல்களில் தூண்டல்கள் கடத்தப்படுதலே நரம்பு உணர்வுத் தூண்டல் எனப்படும்.

கூற்று (ii): நேரம்பு செல் இணைப்பு பகுதியில் இணைப்பு குமிழ்கள், நரம்பு கடத்து பொருள் என்ற வேதிப் பொருளை மின்தூண்டல்களுக்காக மாற்றி அருகமைந்த மூளை புறணிக்குக் கடத்துகின்றன

A) (i) மற்றும் (ii) சரி

B) (i) மற்றும் (ii) தவறு

C) (i) சரி (ii) தவறு

D) (i) தவறு (ii) சரி

113. மனித நரம்பு மண்டலத்தின் முக்கிய பகுதி

A) மைய நரம்பு மண்டலம்

B) புற அமைவு நரம்பு மண்டலம்

C) தானியங்கு நரம்பு மண்டலம்

D) இவை அனைத்தும்

114. மூளை, தண்டுவடத்தை உள்ளடக்கியது

A) மைய நரம்பு மண்டலம்

B) புற அமைவு நரம்பு மண்டலம்
C) தானியங்கு நரம்பு மண்டலம்
D) தானியங்கா நரம்பு மண்டலம்

115. கீழ்க்காணும் இணையை ஆராய்க.
(i) CNS - மைய நரம்பு மண்டலம்
(ii) PNS -தானியங்கு நரம்பு மண்டலம்
(iii) ANS - புற அமைவு நரம்பு மண்டலம்
A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

116. மண்டையோடு, முதுகெலும்பு தொடருக்கு அடியிலும் மைய நரம்பு மண்டலத்திற்கு வெளியிலும் அமைந்துள்ள இரட்டை கடின உறைக்கு என்ன பெயர்?
A) டியூராமேட்டர் B) அரக்னபய்டு
C) பையோடேட்டு D) சைட்டானிக்கு

117. மூளை தவறான கூற்று எது?
A) செய்திகளை ஆய்ந்தறியும் மைய உறுப்பு
B) கட்டளை அமைப்பாக செயல்படுகிறது
C) கட்டுப்பாட்டு அமைப்பாக செயல்படுகிறது
D) வேதிப்பொருளை மின்தூண்டல்களாக மாற்றி

118. இதில் கார்பஸ் கல்லோஸம் எனும் நரம்பு திசு பட்டையால் இணைக்கப்பட்டுள்ளது
A) பெருமூளை B) சிறுமூளை
C) தலாமஸ் D) ஹைப்போ தலாமஸ்

119. கீழ்க்காணும் கூற்றை ஆய்க.
(i) பெருமூளைப் புறணி நரம்பு செல் உடலங்களைக் கொண்ட ஓர் அடுக்கு சாம்பல் நிற நரம்பு செல்களால் ஆனது
(ii) பெருமூளைப் புரணி நரம்பு செல் உடலங்களைக் கொண்ட பல அடுக்கு சாம்பல் நிற நரம்பு செல்களால் ஆனது
(iii) பெருமூளைப் புறணி சாம்பல் நிறம் பெற்றிருப்பதனால் இது சாம்பல் பொருள் எனப்படும்
(iv) பெருமூளைப் புறணி கார்பஸ் கல்லோஸம் பெற்றிருப்பதனால் இது சாம்பல் பொருள் எனப்படும் மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) அனைத்தும் சரியானவை
B) (i) மற்றும் (ii) சரி
C) (ii) மற்றும் (iii) சரி
D) (iii) மற்றும் (iv) சரி

120. இதில் பெருமூளை புறணியில் இல்லாதவை
A) கட்டுப்படுத்தும் பகுதிகள்
B) இயக்கப் பகுதிகள்
C) உணர்வுப் பகுதிகள்
D) இணைப்புப் பகுதிகள்

121. பல்வேறு உணர்தலுக்கு இடையேயான தொடர்பு நினைவாற்றல், தகவல் பரிமாற்றம் போன்ற பணிகளுக்குப் பொறுப்பேற்கும் பகுதி
A) இயக்கப்பகுதிகள்
B) உணர்வுப்பகுதிகள்
C) இணைப்பு பகுதிகள்
D) இவை அனைத்தும்

122. இவற்றில் பெருமூளையின் பணியற்றது எது?
A) கற்பனைத்திறன், காரணகாரியம் ஆய்ந்தறிதல்
B) அறிவுக்கூர்மை, நினைவாற்றல்
C) பார்த்தல், சுவையறிதல்
D) கிளர்ச்சி, கோபம், பயம்

123. இவற்றில் எது பாலுறவு நடத்தையை ஒழுங்குபடுத்துதல் பணியை செய்கிறது?
A) பெருமூளை
B) தலாமஸ்
C) ஹைபோதலாமஸ்
D) இவற்றில் எதுவுமில்லை

124. கார்போராகுவாட்ரி ஜெமினாவின் பணியானது
A) பல்வேறு பார்த்தலின் அனிச்சைச் செயல்கள்
B) பார்வையின் சார்பு இயக்கத்தைக் கட்டுப்படுத்துதல்
C) ஒழுங்குபடுத்துதல் செயல்களை செய்தல்
D) இவை அனைத்தும்

125. இவற்றில் எது பின்மூளையில் காணப்படுவதில்லை
A) தலாமஸ் B) பான்ஸ்
C) சிறுமூளை D) முகுளம்

126. கீழ்க்காணும் கூற்றை ஆய்க.
(i) சிறுமூளையின் கதுப்புகளை இணைக்கும் நரம்பு நாரிழை பாலம் பான்ஸ் ஆகும்
(ii) பான்ஸ் பெருமூளையிலிருந்து சிறுமூளைக்கு செய்திகளைக் கடத்துகிறது
(iii) பான்ஸ் நடத்தல், ஓடுதல் போன்ற இயக்கு தசைகளின் இயக்கங்களை ஒழுங்குபடுத்துகிறது
மேற்கண்ட கூற்றுகளில் தவறானது எது/எவை?
A) மூன்றும் தவறானவை
B) (i) மட்டும் தவறானது
C) (ii) மட்டும் தவறானது
D) (iii) மட்டும் தவறானது

127. இவற்றில் எது முகுளத்தின் பணி இல்லை
A) மேலேறும் மற்றும் கீழிறங்கும் நரம்பு பாதைகளை ஒருங்கிணைக்கும் வழித்தடமாக செயலாற்றுகிறது
B) இதயத்துடிப்பு செயல்களை ஒழுங்கு படுத்துகிறது
C) உறக்கம் செயலை ஒழுங்குபடுத்துகிறது
D) மூச்சுவிடுதல், அனிச்சை செயல்களின் மையமாக முகுளம் செயல்படுகிறது

128. தண்டுவடத்தின் முடிவுநார் நீட்சி என்பது
A) தண்டுவடம் மூடப்பட்டுள்ள சவ்வு
B) தண்டுவட நரம்புகள்
C) தண்டுவடத்தின் கீழ்முனை நாரிழை
D) தண்டுவடத்தின் முதுகுபக்க மையப்பகுதி

129. கீழ்க்காணும் கூற்றை ஆய்க.
(i) தண்டுவடத்தின் மையப்பகுதி நெடுகிலும், மூளைத்தண்டுவட திரவத்தால் நிரப்பப்பட்ட மையக்குழல் பரவி இருக்கிறது
(ii) தண்டுவடம் மூளையின் வென்ட்ரிக்கிளின் தொடர்ச்சியாகும்
(iii) தண்டுவடத்தின் புறப்பகுதி மெடுல்லா உறையற்ற சாம்பல் நியூரான்களால் ஆக்கப்பட்டுள்ளது

(iv) தண்டுவடத்தின் புறப்பகுதி மெடுல்லா உறையற்ற சாம்பல் நியூரான்களால் ஆக்கப்பட்டுள்ளது

மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) அனைத்தும் தவறானவை

B) (i) மட்டும் (ii) சரியானவை

C) (ii) மட்டும் (iii) சரியானவை

D) (iii) மட்டும் (iv) சரியானவை

130. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறானது எது?

A) தண்டுவடம் மூளைக்குள்ளும், வெளியேயும் செயலாற்றுகிறது

B) தண்டுவடம் மூளைக்குள்ளும், வெளியேயும் அனிச்சை செயலின் மையமாக செயலாற்றுகிறது

C) தானியங்கி நரம்பு மண்டலத்தில் உள்ள பிரிவு மற்றும் எதிர்பிரிவு நரம்புகள் ஒன்றுக்கொன்று இணையாக செயல்படுகின்றன

D) தானியங்கு நரம்பு மண்டலத்தில் உள்ள பிரிவு மற்றும் எதிர்பிரிவு நரம்புகள் ஒன்றுகொன்று எதிராக செயல்படுகிறது

131. கண்ணிலிருந்து தோன்றும் பார்வை நரம்புகள் பற்றிய சரியான கூற்று எது?

A) கபால நரம்பு உணர்ச்சி நரம்பாக செயல் புரிகின்றது

B) கபால நரம்பு இயக்கு நரம்பாகச் செயலகற்றி மூளையிலிருந்து செயலாற்றும் உறுப்புகளுக்கு நரம்பு தூண்டல்களை எடுத்துச் செல்கிறது

C) கபால நரம்பு கலப்பு நரம்பாக செயல்படுகிறது

D) உணர் உறுப்புகளிலிருந்து நரம்புத் தூண்டல்களை முகுளத்திற்கு எடுத்து செல்கிறது

132. இவற்றில் தவறான கூற்று எது?

A) மூளையிலிருந்து 12 இணை கபால நரம்புகள் உருவாகின்றன

B) அனைத்து தண்டுவட நரம்புகளும் கபால நரம்புகள்

C) தண்டுவடத்திலிருந்து 31 இணை தண்டுவட நரம்புகள் உருவாகின்றன

D) அனைத்து தண்டுவட நரம்புகளும் கலப்பு நரம்புகளே

133. நாளமில்லாச் சுரப்பி மண்டலம் இந்த இயற்கைசெயல் களைக் கட்டுப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் செய்கிறது

A) உடல் வளர்ச்சி

B) இனப்பெருக்கம்

C) வாழ்வைத் தொடர்ந்து பேணுதல்

D) இவை அனைத்தும்

134. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.

(i) எண்டோகிரைன் சுரப்பிகள் எனப்படும் நாளமில்லாச் சுரப்பிகள் மண்டலத்தில் உள்ள சுரப்பிகள் அனைத்துக்கும் நாளங்கள் இல்லை

(ii) எண்டோகிரைன் சுரபிகள் சுரக்கும் பொருட்களுக்கு ஹார்மோன்கள் என்று பெயர்

(iii) ஹார்மோன் இரத்தத்தின் மூலம் உற்பத்தியாகும் இடங்களிலிருந்து செயலாற்றும் இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன

மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) மூன்றும் சரியானவை

B) (i) மட்டும் சரியானது

C) (ii) மட்டும் சரியானது

D) (iii) மட்டும் சரியானது

135. தைமஸ் சுரப்பி எங்கு காணப்படுகிறது?

A) தலை B) கழுத்து

C) மார்பு D) வயிற்றுப்பகுதி

136. இவற்றில் வயிற்றுப் பகுதியில் காணப்படும் சுரப்பி

A) கணையம் B) அட்ரீனல் சுரப்பி

C) இனப்பெருக்க சுரப்பிகள்

D) இவை அனைத்தும்

137. இவற்றில் பொருத்தமான இணை எது?

A) பினியல் சுரப்பி - கழுத்து

B) தைராய்டு சுரப்பி - தலை

C) தைமஸ் சுரப்பி - வயிறு

D) பிட்யூட்டரி சுரப்பி - தலை

138. இவற்றில் பொருத்தமான இணை எது?

(i) அட்ரீனல் சுரப்பி - லாங்கர் ஹான்ஸ் திட்டுகள்

(ii) கணையம் - அட்ரீனல் கார்டெக்ஸ்

(iii) விந்தகம் - ஆண்

(iv) அண்டச்சுரப்பி - பெண்

மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) (i) மற்றும் (ii) சரியானவை

B) (ii) மற்றும் (iii) சரியானவை

C) (iii) மற்றும் (iv) சரியானவை

D) (i) மட்டும் (iv) சரியானவை

139. வேதியியல் அடிப்படையில் ஹார்மோன்கள்

A) புரதங்களாக உள்ளன

B) அமினோ அமிலங்களாக உள்ளன

C) ஸ்டீராய்டுகளாக உள்ளன

D) இவை அனைத்தும்

140. நாளமில்லா குழுவின் நடத்துனர் என அழைக்கப்படும் சுரப்பி

A) பிட்யூட்டரி சுரப்பி

B) பினியல் சுரப்பி

C) தைராய்டு சுரப்பி

D) தைமஸ் சுரப்பி

141. கீழ்க்காணும் கூற்றை ஆய்க.

(i) பட்டாணி அளவே உள்ள பிட்யூட்டரி சுரப்பி மூளையின் ஹைப்போதலாமஸோடு இணைந்துள்ளது

(ii) பிட்யூட்டரி சுரப்பியின் முன் கதுப்பாக நியூரோஹைபோபைசிஸ் அமைந்துள்ளது

(iii) பிட்யூட்டரி சுரப்பியின் பின் கதுப்பாக அடினோஹைபோபைசிஸ் அமைந்துள்ளது

மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) மூன்றும் சரியானவை

B) (i) மட்டும் சரியானது

C) (ii) மட்டும் சரியானது

D) (iii) மட்டும் சரியானது

142. இதுபெண்கள் பால் சுரப்பியின் வளர்ச்சி மற்றும் குழந்தை பேற்றிற்கு பிறகு பால் உற்பத்தியைத் தூண்டுகிறது

A) லூட்டினைசிங் ஹார்மோன்
B) லேக்டோஜீனிக் ஹார்மோன்
C) அட்ரினோ கார்ட்டிக்கோடிரோபிக் ஹார்மோன்
D) சொமட்டோட்ரோபிக் ஹார்மோன்

143. சொமட்டோரோபிக் ஹார்மோன் குறைவினால் ஏற்படுவது
A) சிறுவர்களில் குள்ளத்தன்மை
B) பெரிவர்களில் அக்ரோமெகலி
C) சிறுவர்களில் அசுரத்தன்மை
D) A மற்றும் B

144. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) சொமட்டோட்ரோபிக் ஹார்மோன் - வளர்ச்சி ஹார்மோன்
B) கைரோட்ரோபிக் - தைராய்டு தூண்டும் ஹார்மோன்
C) லூட்டினைசிங் ஹார்மோன் - பாலிக்கிள் செல்களை தூண்டும்
D) அட்ரினோ கார்ட்டிக்கோடிரோபிக் ஹார்மோன் - அட்ரீனல் புறணியைத் தூண்டும்

145. இவற்றில் ஆண்களில் இடையீட்டு செல்களைத் தூண்டும் ஹார்மோன்
A) STH B) TSH
C) ACTH D) ICSH

146. ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்டீரோன் போன்ற பெண் இன ஹார்மோன்களின் உற்பத்திக்கும் காரணமாகிறது
A) LH B) FSH
C) TSH D) LTH

147. ஆன்டிடையூரிடிக் ஹார்மோன் செயல்பாடானது
A) நீர் மீண்டும் உறிஞ்சப்படுவதைத் தூண்டி, அடர்த்தியான சிறுநீரை குறைந்த அளவு உருவாக்குகிறது
B) இரத்தக் குடில்களைச் சுருங்கச் செய்து இரத்த அழுத்தத்தை உயர்த்துகிறது
C) ADHன் குறை சுரப்பு, டையாபெடீஸ் இன்சிபிடஸ்ஸைத் தோற்றுவிக்கிறது. இதன் காரணமாக நீர்த்த சிறுநீரை அதிக அளவு வெளியேற்றுகிறது
D) இவை அனைத்தும்

148. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.
(i) கழுத்துப் பகுதியில் குரல்வளையின் இருபுறமும் பக்கத்திற்கு ஒன்றாக இரு கதுப்புகளை உடைய அமைப்பே தைராய்டு சுரப்பி ஆகும்
(ii) தைராய்டு சுரப்பி தைராக்ஸின் என்ற ஹார்மோனைச் சுரக்கிறது
(iii) தைராய்டு சுரப்பியில் டைரோசின் அமினோ அமிலமும், அயோடின் கலந்த புரதமும் உள்ளது
மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

149. இவற்றில் எது தைராக்ஸின் பணியல்ல
A) திசு வளர்ச்சி மற்றும் மாறுபாடு அடைதலை ஊக்குவித்தல்
B) இரத்தத்தில் அயோடின் மற்றும் சர்க்கரை அளவை ஒழுங்குபடுத்துதல்
C) இதயத் துடிப்பின் வேகத்தை அதிகரிக்கின்றது
D) உடலின் வெப்பத்தை அதிகரிக்கிறது

150. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) எளிய காய்டர் - முன் கழுத்தை கழலை
B) கார்டிஸோன் - சர்க்கரியின் அளவு அதிகம்
C) ஆல்டோஸ்டீரோன் - தாது கலந்த கார்டிகாய்டு
D) கார்டிஸோன் - குளுக்கோகார்டிகாய்டு

151. தைராக்ஸினின் குறை சுரப்பு இந்த குறைபாட்டை உண்டாக்குகிறது?
A) எளியகாய்டர் B) மிக்ஸிடிமா
C) கிரிட்டினிஸம் D) இவை அனைத்தும்

152. உணவில் அயோடின் பற்றாக்குறையினால் இது ஏற்படுகிறது?
A) எளிய காய்டர்
B) மிக்ஸிடிமா
C) கிரிட்டினிசம்
D) ஹைபர்மைராய்டிஸம்

153. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) எளிய காய்டர் - தோல் கடினமாதல்
B) மிக்ஸிடிமா - குறைவான இதய துடிப்பு
C) கிரிட்டினிசம் - துருத்திய நாக்கு
D) டயாபடீஸ் மெல்லிடஸ் - இன்சுலின் குறைபாடு

154. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க
(i) கணையத்தின் எக்ஸோகிரைன் பகுதி லாங்கர்ஹான்ஸ் திட்டுகள் ஆகும்
(ii) கணையத்தின் என்டோகிரைன் பகுதி கணைய நீரை சுரக்கிறது
(iii) கணையத்தின் ஆல்பா செல்கள் இன்சுலின் மற்றும் அமைவினை சுரக்கிறது
(iv) கணையத்தின் பீட்டா செல்கள் குளுக்கோகான் ஹார்மோனை சுரக்கிறது
மேற்கண்ட கூற்றுகளில் தவறானது எது/எவை?
A) நான்கும் தவறானவை
B) (i) மற்றும் (ii) தவறானவை
C) (iii) மற்றும் (iv) தவறானவை
D) (i) மட்டும் (iv) தவறானவை

155. இவற்றில் இன்சுலின் முக்கிய பணி
A) ஆக்ஸிகரணத்திற்காக, செல்கள் குளுக்கோஸை எடுத்துக் கொள்வதை ஊக்குவிக்கிறது
B) இது குளுக்கோஸை கிளைகோஜனாக மாற்றி கல்லீரல் மற்றும் தசைகளில் சேமிக்கப்படுவதை அதிகரிக்கச் செய்கிறது
C) புரதம், கொழுப்பு பொருட்களிலிருந்து குளுக்கோஸ் உருவாவதை தடுக்கிறது
D) இவை அனைத்தும்

156. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க
(i) ஒவ்வொரு சிறுநீரகத்தின் மீதும் அட்ரீனல் சுரப்பி அமைந்துள்ளது
(ii) அட்ரீனல் சுரப்பி கார்டெக்ஸ் எனும் உட்புறப் பகுதியை கொண்டுள்ளது

(iii) அட்ரீனல் சுரப்பி அட்ரீனல் மெடுல்லா எனும் புறப்பகுதியை கொண்டுள்ளது

மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

157. இது சுரக்கும் ஹார்மோன்கள் ஆல்டோஸ்டீரோன் மற்றும் கார்டிஸோன் ஆகும்

A) அட்ரீனல் கார்டெக்ஸ்
B) ஆல்டோஸ்டீரோன்
C) கார்டிஸோன்
D) அட்ரீனல் மெடுல்லா

158. அட்ரீனலின், நார் அட்ரீனலின் இவ்வாறு அழைக்கப்படுகிறது

A) அவசரக் கால ஹார்மோன்
B) பறக்கும் ஹார்மோன்
C) சண்டை ஹார்மோன்
D) இவை அனைத்தும்

159. இவற்றில் பொருத்தமான இணை எது?

(i) அட்ரீனலின் - எபிநெஃப்ரின்
(ii) நார்அட்ரீனலின் - நார் எபிநெஃப்ரின்

A) (i) மற்றும் (ii) சரி
B) (i) மற்றும் (ii) தவறு
C) (i) சரி (ii) தவறு
D) (i) தவறு (ii) சரி

160. அட்ரீனலின், நார்அட்ரீனலின் இந்த பணியை செய்கின்றன

A) இதயத் துடிப்பின் வேகத்தை அதிகரிக்கின்றன
B) சுவாச வீதத்தை அதிகரிக்கின்றன
C) உரோமம் குத்திட்டு நிற்கச் செய்கிறது
D) இவை அனைத்தும்

161. இவற்றில் எது விந்தகத்தின் பணியல்ல

A) ஆண் இன ஹார்மோனை உண்டாக்குதல்
B) டெஸ்டோஸ்டீரோன் ஹார்மோனை சுரத்தல்
C) ஈஸ்ட்ரோஜனை உற்பத்தி செய்தல்
D) விந்து உற்பத்தியைத் தூண்டிவிடல்

162. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க

(i) ஈஸ்ட்ரோஜன்: பெண் இனப்பெருக்க உறுப்புகளின் வளர்ச்சிக்கு காரணமாகிறது

(ii) ஈஸ்ட்ரோஜன் பெண் இரண்டாம் நிலை பெண் பால் பண்புகள் தோன்றக் காரணமாகிறது

(iii) ரிலாக்ஸின் மாதவிடாய் சுழற்சி மற்றும் கர்ப்ப நிலையைப் பராமரிக்கிறது

(iv) புரோஜெஸ்டிரான், மகப்பேற்றின் போது இடுப்புப் பகுதி தசைகளை தளர்வடையச் செய்து குழந்தைப் பிறப்பை எளிதாக்குகிறது.

மேற்கண்டவற்றில் சரியான கூற்று எது/எவை?

A) அனைத்தும் தவறானவை
B) (i) மற்றும் (ii) சரியானவை
C) (ii) மற்றும் (iii) சரியானவை
D) (iii) மட்டும் (iv) சரியானவை

163. இவற்றில் பெண் இனப்பெருக்க ஹார்மோன்களில் பொருத்தமற்றது எது?

A) ஈஸ்ட்ரோஜன்
B) டெஸ்டோஸ்டிரோன்
C) புரோஜெஸ்டிரான்
D) ரிலாக்ஸின்

164. கீழ்காணும் கூற்றை ஆய்க

(i) பார தைராய்டு சுரப்பி தைராய்டுக்கு உள்ளேயே காணப்படுகின்றன

(ii) பார தைராய்டு சுரப்பி சுரக்கும் ஹார்மோன்கள் கால்சிடோனின், பாராதார் மோன் ஆகும்

(iii) கால்சிடோனின், பாராதார்மோன் ஹார்மோன்கள் தாது உப்புகளின் வளர்சிதை மாற்றத்தைப் பராமரிக்கின்றன

மேற்கண்டவற்றில் சரியான கூற்று எது/எவை?

A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

165. கூற்று (i) தைமஸ் சுரப்பி: மூளையில் கார்பஸ் கல்லோசத்தின் அடியில் காணப்படுகிறது. இது மெலடோனின் என்ற பொருளை உற்பத்திச் செய்கிறது

கூற்று (ii) பினியல் சுரப்பி : இதயத்தின் மேல் அமைந்திருக்கும் பெரும் நிணநீர் அமைப்பு ஆகும். தைமோசின் என்ற பொருளைச் சுரக்கிறது.

A) (i) மற்றும் (ii) சரி
B) (i) சரி (ii) தவறுC) (i) தவறு (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

166. மெடலடோனின் இந்த பகுதிகளில் நிறமிகளின் அடர்த்திக்குக் காரணமாகிறது

A) மார்பு காம்பு
B) முகட்டு வட்டம்
C) விதைப்பை
D) இவை அனைத்தும்

167. இவற்றில் பொருத்தமான இணை எது?

(i) சைட்டோஜீனிக் - இனசெல்களை உருவாக்குதல்
(ii) ஆன்ட்ரோஜன்- ஆண் இன ஹார்மோன்
(iii) அட்ரீனலின் - எபிநெஃப்ரின்
(iv) நாட் அட்ரீனலின் - நார் எபிநெஃப்ரின்

A) இவை அனைத்தும் பொருத்தமானவை
B) (i) மற்றும் (iv) பொருத்தமானவை
C) (ii) மற்றும் (iii) பொருத்தமானவை
D) (iii) மட்டும் (iv) பொருத்தமானவை

168. இவற்றில் எவை இரத்தச் சுற்று உறுப்புகள் அல்ல?

A) இதயம், தமனி
B) சிரைகள், தந்துகிகள்
C) நுரையீரல், சிறுநீரகம்
D) இரத்தம், நிணநீர்

169. வில்லியம் ஹார்வி முதன்முதலில் இதை பற்றி கண்டறிந்து விளக்கினார்

A) இரத்த சுழற்சி B) இரத்தத்தின் பண்புகள்
C) இதயச் செயல்கள் D) இவை அனைத்தும்

170. இவற்றில் தவறான கூற்று எது?

A) மனித இதயம் ஓர் உள்ளீடற்ற தசை-நார் அமைப்புடைய உறுப்பாகும்

B) இதயம் வட்ட வடிவம் அல்லது உருண்டை வடிவம் உடையது

C) இதயத்தைச் சுற்றிலும் இரண்டடுக்குப் படலமாகிய பெரிகார்டியம் உறை அமைந்துள்ளது

D) இதயத்திற்கும் பெரிகார்டியத்திற்கும் இடையில் உள்ள இடைவெளியில் பெரிகார்டிய திரவம் நிரம்பி உள்ளது

171. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க

(i) இதயம் சில சிறப்புப் பண்புகளைக் கொண்ட கார்டியாக் தசையினால் உருவாக்கப்பட்டது

(ii) இதயம் நான்கு அறைகளைக் கொண்டுள்ளது. அவை: வலது ஏட்ரியம் இடது ஏட்ரியம், வலது வெண்ட்டிரிகிள் மற்றும் இடது வெண்ட்டிரிகிள் ஆகும்

(iii) வலதுப்புற இதயமானது சுத்திகரிக்கப்பட்ட இரத்தத்தை பெறுகிறது

(iv) இடதுப்புற இதயமானது சுத்தி கரிக்கப்படாத இரத்தத்தைப் பெறுகிறது

கூற்றுகள் சரியானது எது/எவை?

A) அனைத்தும் சரியானவை

B) (i) மற்றும் (ii) சரியானவை

C) (ii) மற்றும் (iii) சரியானவை

D) (iii) மற்றும் (iv) சரியானவை

172. சுத்திகரிக்கப்பட்ட இரத்தம் என்பது

A) கார்பன் டை ஆக்ஸைடு மிக்க இரத்தம்

B) ஆக்ஸிஜன் மிக்க இரத்தம்

C) உப்பு அதிகம் கொண்ட இரத்தம்

D) சர்க்கரை அதிகம் கொண்ட இரத்தம்

173. கீழ்காணும் கூற்றை ஆய்க

(i) ஆரிகிள்களின் சுவர்கள் தடித்த சுவர்களைக் கொண்டுள்ளன

(ii) வெண்டரிகிள்கள் மெல்லிய தசையாலானவை

(iii) ஆரிக்கிள்கள் இரத்தத்தை வெளிச் செலுத்தும் உறுப்புகளாக உள்ளன

(iv) வெண்டரிகிள்கள் இரத்தத்தைப் பெறக்கூடிய உறுப்புகளாக உள்ளன.

கூற்றுகளில் தவறானது எது/எவை?

A) அனைத்தும் தவறானவை

B) (i) மற்றும் (ii) தவறானவை

C) (ii) மற்றும் (iii) தவறானவை

D) (iii) மற்றும் (iv) தவறானவை

174. மனித இதயத்தில் வலது ஆரிக்குலோ-வெண்ட்ரிக்குலார் துணை எங்கு அமைந்துள்ளது?

A) வலது ஆரிக்கிள் மற்றும் வலது வெண்ட்ரிக்களுக்கு இடையில் அமைந்துள்ளது

B) இடது ஆரிக்கிள் மற்றும் இடது வெண்ட்ரிக்களுக்கு இடையில் அமைந்துள்ளது

C) வலது ஆரிக்கிள் மற்றும் இடது வெண்ட்ரிக்களுக்கு இடையில் அமைந்துள்ளது

D) இடது ஆரிக்கிள் மற்றும் வலது வெண்ட்ரிக்களுக்கு இடையில் அமைந்துள்ளது

175. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க

(i) நான்கு நுரையீரல் சிரைகளில் மூலம் நுரையீரலிலிருந்து ஆக்ஸிஜன் மிக்க இரத்தத்தை வலது ஆரிக்கிள் பெறு கின்றன

(ii) கீழ்பெரும் சிரை, மேல்பெரும் சிரை மூலம் உடலிலிருந்து சுத்திகரிக்கப்படாத இரத்தம் முழுவதையும் இடது ஆரிக்கிள் பெறுகின்றது

(iii) வலது வெண்ட்டிரிக்கிள் வலது ஆரிக்கிளிலிருந்து ஆக்ஸிஜனற்ற இரத்தத்தைப் பெற்று நுரையீரல் தமனி மூலம் நுரையீரலுக்குள் செலுத்துகின்றது

(iv) இடது வெண்டரிக்கிள், இடது ஆரிக்கிளிலிருந்து ஆக்ஸிஜன் மிகுந்த இரத்தத்தைப் பெற்று பெருந்தமனிக்குள் செலுத்துகின்றது

கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) அனைத்தும் சரியானவை

B) (i) மற்றும் (ii) சரியானவை

C) (ii) மற்றும் (iii) சரியானவை

D) (iii) மற்றும் (iv) சரியானவை

176. இவற்றில் எது இதயத்தில் இரத்தம் பின்னோக்கிச் செல்வதை தடுக்கின்றது?

A) இடது வெண்டரிகிள்

B) வலது ஆரிக்கிள்

C) மிட்ரல் வால்வு

D) பல்மோனரி வால்வு

177. இவற்றில் பொருத்தமற்ற கூற்று எது?

A) ஏட்ரியோ வெண்ட்டிரிகுலார் துளை மூவிதழ் வால்வினால் பாதுகாக்கப் படுகிறது

B) ஆரிக்குலோ வெண்ட்ட்ரிக்குலார் துணை ஈரிதழ் வால்வினால் பாதுகாக்கப்படுகிறது

C) இடது வெண்ட்ரிக்கிள் பெருஞ்சிரை வால்வினால் பாதுகாக்கப்படுகிறது

D) வலது வெண்ட்ரிக்கிள் துளை பாறைவடிவ பல்மோனா வால்வினால் பாதுகாக்கப்படுகிறது

178. சிஸ்டோல் என்பது

A) இதயத்தின் அறை சுருங்கும் நிலை

B) இதயத்தின் அறை விரிவடைதல்

C) ஆரிக்கிளானது இரத்த பெறுதல்

D) வெண்ட்ரிக்களிலிருந்து இரத்தம் வெளியேறுதல்

179. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க

(i) இதயத்தின் அறை சுருங்கும் நிலை சிஸ்டோல் என்று பெயர்

(ii) இதயத்தின் அறை விரிவடைவதற்கு டையஸ்டோல் என்று பெயர்

(iii) வெண்ட்ரிக்கிளானது இரத்தத்தைப் பெறும்பொழுது விரிவடைந்து நிலையை அடைகிறது. இதற்கு வெண்ட்ரிக்குலார் சிஸ்டோல் என்று பெயர்

(iv) இரத்தம் ஆரிக்கிளில் இருந்து நுரையீரல் தமனிக்குள்ளும், மகாதமனிக் குள்ளும் செலுத்தும்போது இதயம் சுருங்குகிறது. இதற்கு ஆரிக்குளார் டையஸ்டோல் என்று பெயர்

கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) அனைத்தும் சரியானவை

B) (i) மற்றும் (ii) சரியானவை

C) (ii) மற்றும் (iii) சரியானவை

D) (iii) மற்றும் (iv) சரியானவை

180. ஒரு மனிதனின் சராசரி இதயத் துடிப்பு, ஒரு நிமிடத்திற்கு -------- துடிப்புகளாகும்

A) 52 B) 62 C) 72 D) 82

181. கூற்று (A) : வெண்ட்ரிக்கிளின் சுருக்கத்தின் போது ஆரிக்குலோ வெண்ட்ரிகுலார் வால்வுகள் மூடுவதால் 'டப்' என்ற ஒலி தோன்றுகிறது

கூற்று (B) : வெண்ட்ரிக்கிள்களின் விரிவின் போது 'லப்' என்ற ஒலி தோன்றுகிறது

A) (A) மற்றும் (B) சரியானவை.

B) (A) மற்றும் (B) தவறானவை

C) (A) சரி ஆனால் (B) தவறு

D) (A) தவறு ஆனால் (B) சரி

182. இவற்றில் எது இரத்த குழாய் வகையை சேராதது?

A) தமனி B) தந்துகி

C) சிரை D) கார்டியாக்

183. கீழ்காணும் கூற்றை ஆய்க

(i) தமனிகள் இதயத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட இரத்தத்தை எடுத்துச் செல்பவை

(ii) சிறுநீரக தமனி மட்டும் சுத்திகரிக்கப்படாத இரத்தத்தை, சுத்திகரிப்பதற்காக இதயத்திலிருந்து சிறுநீரகத்திற்கு எடுத்து செல்லும்

(iii) பெருந்தமனி சிறுதமனிகளாக பிரிகின்றன. அவை மேலும் வென்யூல்கள் என்னும் நுண்தமனி களாக பிரிகின்றன

கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) மூன்றும் சரியானவை

B) (i) மட்டும் சரியானது

C) (ii) மட்டும் சரியானது

D) (iii) மட்டும் சரியானது

184. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?

A) ஆர்ட்டீரியோல்கள் - மெல்லிய நுண்தமனிகள்

B) வென்யூல்கள் - நுண்சிரைகள்

C) ஈரிதழ் வால்வு - பல்மோனரி வால்வு

D) பிறைவடிவ வால்வு - பெருந்தமனி வால்வு

185. இவற்றில் தவறான கூற்று எது?

A) தந்துகிகள் இதயத்தை சுற்றியுள்ள இரத்தக்குழாய் மூவிதழ் வால்வு

B) வென்யூல்கள் திசுக்களிலிருந்து சுத்திகரிக்கப்படாத இரத்தத்தை எடுத்து வருகின்றன

C) வென்யூல்கள் இணைந்து சிரைகளாக மாறுகின்றன

D) சிரைகள் கீழ்பெருஞ் சிரையாகவும், மேற்பெருஞ்சிரையாகவும் மாறி இரத்தத்தைச் சேகரித்து இதயத்தினுள் சேர்க்கிறது.

186. இரத்தம் பிளாஸ்மா எதனை கொண்டிருக்கவில்லை

A) நீர்

B) பிளாஸ்மா

C) மெடுல்லா

D) கனிம மற்றும் கரிம ஆக்ககூறுகள்

187. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க

(i) உடலின் பெரும்பான்மையான பணிகள் எல்லாவற்றிலும் இரத்தம் முக்கிய பங்கேற்கின்றது

(ii) இரத்தம் திரவநிலையிலுள்ள இணைப்புத் திசுவாகும்

(iii) இரத்தத்தில் பிளாஸ்மா என்னும் திரவப் பகுதியும் செல்களும் உள்ளன

கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) மூன்றும் சரியானவை

B) (i) மட்டும் சரியானது

C) (ii) மட்டும் சரியானது

D) (iii) மட்டும் சரியானது

188. இவற்றில் தவறான கூற்று எது?

A) பிளாஸ்மா புரோட்டின் என்பது பிளாஸ்மாவின் முக்கிய கனிமக் கூறாகும்

B) பிளாஸ்மாவில் உள்ள குளோபுலின் நோய் எதிர்ப்பாற்றலுக்கு இன்றியமையாதது

C) இரத்தம் உறைதலில் ரீனல் பிரமீடில் முக்கிய பங்கை வகிக்கின்றது

D) ஆல்புமின் நீர்ச் சமநிலையைச் சீராக்குகின்றது

189. இவற்றில் பொருத்தமான இணை எது/எவை?

(i) பிளாஸ்மா - இரத்த திரவப்பொருள்

(ii) த்ராம்போசைட்டுகள் - இரத்த வெள்ளையணுக்கள்

(iii) லூக்கோசைட்டுகள் - இரத்தத் தட்டைச் செல்கள்

(iv) எரித்ரோசைட்டுகள் - இரத்தச் சிவப்பணுக்கள்

A) (ii) மற்றும் (iii) சரியானவை

B) (i) மற்றும் (iii) சரியானவை

C) (ii) மற்றும் (iv) சரியானவை

D) (i) மற்றும் (iv) சரியானவை

190. இவற்றில் பொருத்தமான இணை எது?

A) இரத்த சிவப்பணுக்கள் - அமீபாய்டு செல்கள்

B) இரத்த வெள்ளையணுக்கள்- ஹீமோகுளோபின்

C) இரத்த தட்டைச் செல்கள் - எலும்பின் சிவப்பு மஜ்ஜை

D) எரித்ரோசைட்டுகள்- ஃபைபிரினோஜன்

191. கீழ்காணும் கூற்றுகளை ஆய்க

(i) இரத்தச் சிவப்பணுக்கள்: இவை தெளிவான உட்கருவைக் கொண்ட அமீபாய்டு செல்கள் ஆகும்.

(ii) இரத்த வெள்ளையணுக்கள்: நோய்க் கிருமிகளின் தாக்குதலிலிருந்து உடலை பாதுகாக்கின்றது.

(iii) இரத்த தட்டைச் செல்கள்: இரத்தம் உறைதல் மற்றும் இரத்த இழப்பு தடுத்தலில் முக்கிய பங்கேற்கின்றன.

கூற்றுகளில் தவறானது எது/எவை?

A) மூன்றும் தவறானவை

B) (i) மட்டும் தவறானது

C) (ii) மட்டும் தவறானது

D) (iii) மட்டும் தவறானது

192. இவற்றில் தவறான கூற்று எது?

A) எலும்பின் சிவப்பு மஜ்ஜையிலுள்ள சிறிய செல்கள் அழிவதால் த்ராம்போ சைட்டுகள் உருவாகின்றன.

B) எலும்பின் சிவப்பு மஜ்ஜையில் பெரிய செல்கள் அழிவதால் த்ராம் போசைட்டுகள் உருவாகின்றன.

C) எரித்ரோசைட்டுகள் இரத்தத்திற்கு சிவப்பு நிறத்தையளிக்கும் ஹீமோ குளோபினைப் பெற்றிருக்கின்றன.

D) ஹீமோகுளோபின் என்ற சுவாச நிறமி ஆக்ஸிஜன் மீது அதிக நாட்டம் உடையது. சுவாசித்தலில் முக்கியப் பங்கு கொள்கிறது

193. நமது உடலின் 'மாஸ்டர் கெமிஸ்ட்' என்று அழைக்கப்படுவது
A) இதயம்
B) நுரையீரல்
C) தோல்
D) சிறுநீரகம்

194. சிறுநீரகத்தின் முக்கிய கழிவுப்பொருள்
A) யூரியா
B) யூரிக் அமிலம்
C) கிரியாட்டினின்
D) இவை அனைத்தும்

195. நமது உடலின் முக்கிய கழிவு நீக்க உறுப்பு
A) சிறுநீரகம் B) தோல்
C) நுரையீரல் D) கண்

196. இவற்றில் பொருத்தமான இணை எது?
கழிவு நீக்க உறுப்பு கழிவுப் பொருட்கள்
A) நுரையீரல் - நைட்ரஜன் கழிவுகள்
B) சிறுநீரகம் - கார்பன் - டை-ஆக்ஸைடு
C) தோல் - நீர் மற்றும் உப்புகள்
D) சிறுநீரகம் - நீர் ஆவியாதல்

197. சிறுநீரகத்தின் அமைப்பு மற்றும் செயல் அலகு
A) மெடுல்லா B) ஹைலஸ்
C) பெல்விஸ் D) நெப்ரான்

198. செல்லுக்கு வெளியே செரித்தல் நிகழ்வு இப்பகுதியில் நிகழ்கிறது
A) வாய் B) வயிறு
C) டையாட்டம் D) லூமன்

199. உயிரிகளில் சுவாசம் தன் உடலின் மேற்பரப்பு மூலம் நடைபெறுகிறது
A) அமீபா
B) ஹைட்ரா
C) கடற்பஞ்சு
D) இவை அனைத்தும்

200. எது இரத்தத்தை வடிகட்டி சிறுநீரைப் பிரிக்கிறது?
A) நெப்ரான்
B) மால்பீஜியன் கேப்சியூல்
C) மெடுல்லா
D) குளோமுருலஸ்

201. ATP யானது இதற்கு பயன்படுகிறது
A) தசைச் சுருக்கம்
B) புரதச் சேர்க்கை
